நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 104 /2020

## P.W. 11 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | விஸ்வநாதன் |
| தந்தை / கணவர் பெயர் | : | வரதராஜன் |
| கிராமம் | : | தாசநாயக்கன்பட்டி |
| வட்டம் | : | சேலம் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 46 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 26–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**1 மற்றும் 3 ம் எதிரிகள் ஆஜர். 2 மற்றும் 4 ம் எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.10 AM.

1. நான் தற்போது சேலம் அரசு குமாரமங்கலம் மருத்துவகல்லூரியில் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் மேல் சொன்ன மருத்துமனையில் கடந்த 03.11.2019 ம் தேதி

இரவு 10.05 மணி அளவில் பணியில் இருந்தபோது தங்கராஜ் வயது 36 என்ற நபர் அவரது சகோதரர் கார்த்திக் என்பவருடன் சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு மேட்டுர் அரசு மருத்துவமனையில் டாக்டர் பிரசாத் என்ற மருத்துவர் மூலம் விபத்து பதிவேடுஎண்.13103 பதிவு செய்யப்பட்டு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்தவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டு அவரை உள்நோயாளியாக அவசர பிரிவு அறுவை சிகிச்சை பிரிவு வார்டில் அனுமதித்தேன்.

2. மற்றும் அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜீவா என்பவர் அளித்த காயம் குறித்தான கருத்துரையை பெற்று அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கி அதை மேட்டுர் அரசு மருத்துவமனை மருத்துவர் பிரசாத் என்பவருக்கு அனுப்பி வைத்தேன். (**தங்கராஜுக்கு சேலம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு நகல் மற்றும் நான் வழங்கிய கருத்துரை அ.சா.ஆ.12 மற்றும் 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

3. இதே வழக்கில் காயம் அடைந்ததாக கூறி அன்றைய தினமே இரவு 10.10 மணி அளவில் மணிவண்ணன் வயது 34 அவரது உறவினர் சிவராஜ் என்பவருடன் மேல் சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு மேட்டுர் அரசு மருத்துவமனையில் டாக்டர் பிரசாத் என்ற மருத்துவர் மூலம் விபத்து பதிவேடுஎண்.13104 பதிவு செய்யப்பட்டு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்தவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டு அவரை உள்நோயாளியாக அவசர பிரிவு அறுவை சிகிச்சை பிரிவு வார்டில் அனுமதித்தேன்.

4. மற்றும் அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜீவா என்பவர் அளித்த காயச் சான்றிதழின் படி அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என்று கூறி அதை மேட்டுர் அரசு மருத்துவமனை மருத்துவர் பிரசாத் என்பவருக்கு அனுப்பி வைத்தேன். இந்த விபத்தில் காயம் அடைந்த இரண்டு நபர்களுக்கும் மருத்துவர் திருமதி ஜீவா என்பவர் தற்போது நாமக்கல் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சைபிரிவு உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். போலீசார் என்னை விசாரித்தனர்.

5. ( **மேற்படி சாட்சி இந்த வழக்கு சம்பந்தபட்ட மருத்துவ சிகிச்சை தொடர்பான அனைத்து ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை கொண்டு வந்து**

இருக்கிறார். மேற்படி சிகிச்சை அளித்த மருத்துவர் தற்போது எந்த மருத்துவமனையில் பணியில் இருக்கிறார் என்பதை அறிய முடியவில்லை என்பதால் தான் அரசு தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு சேலம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவருக்கு அழைப்பாணை அனுப்பபட்டது. இன்று சாட்சியம் அளித்த மருத்துவர் மேற்படி சிகிச்சை அளித்த மருத்துவர் குறித்து சரியான விவரங்களை தெரிவித்தாலும், முதல் நிலை சாட்சி கிடைக்காமல் போனால்தான் இரண்டாம் நிலை சாட்சியங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதாலும், இந்த வழக்கில் இந்த சாட்சி கொடுத்தஆவணங்களை மட்டும் இந்த நீதிமன்றம் குறியீடு செய்கிறது. மற்ற ஆவணங்களை குறியீடு செய்ய அவசியம் ஏற்பட்டால் மேற்படி சிகிச்சை அளித்த மருத்துவரை நேரடியாக விசாரணை செய்து ஆவணங்களை குறியீடு செய்ய இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது.)

**எதிரிகள்₹ தரப்பில் குறுக்கு விசாரணை**

6. நான் மேற்படி காயம்பட்ட நபர்களுக்கு நேரடியாக சிகிச்சையளிக்கவில்லை. உள்நோயாளிகளாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். காயத்தின் தன்மைகுறித்து சிகிச்சையளித்த மருத்துவருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். ஏற்கனவே மருத்துவர் கொடுத்த சிகிச்சைகுறிப்பின் அடிப்படையில் தான் நான் கருத்துரை வழங்கியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–11.40 AM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**